REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 நயா பைசா
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 17உ சனி (30—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 18உ ஞாயிறு (31—3—57) [இதழ் 250

ஊழலோ ஊழல்! எங்கும்--எதிலும் ஊழல்!

நேரு நிர்வாகம் துர்நாற்றமடிக்கிறது!

உள்நாட்டில்மது ஒழிப்பு-வெளிநாட்டில்மதுபடையல்!

சொந்தத்தில் மதுவருந்த அரசாங்கப் பணமாம்!

கார் வாங்குவதில் சட்டம் மீறப்பட்டது

அரசாங்க அனுமதியின்றிப் பெருந் தொகையை முன்பணமாகப் பெற்றனராம்!

விதிகளை மீறுகின்றனர்--எச்சரிக்கையை அலட்சியப்படுத்துகின்றனர்!

இந்தியத் தூதுவர் அலுவலகங்களில் நடைபெறும் வீண்செலவு குறித்து மக்கள் சபைக் கணக்குத் தணிக்கைக் குழு தரும் தகவல்

புதுடில்லி, மார்ச் 28—

மக்கள் சபை பொதுத் தணிக்கைக் குழுவின் 23-வது தணிக்கை அறிக்கையை, அக்குழுவின் தலைவர் வி. பி. காந்தி அவர்கள், மக்கள் சபையில் இன்று வழங்கினர்.

அவ்வறிக்கையில், வெளிநாட்டு விவகார அமைச்சர் துறையின், வழக்கமான முறைதவறியதும் பொறுப்பற்றதுமான வீண் செலவு பற்றி எடுத்துக்காட்டி வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது; அவற்றில் சில பகுதிகளே இன்று இங்கு தரப்பட்டுள்ளன.

அரசாங்க அனுமதி பெறாது, சொந்தத்திற்கு முன்பணம் பெற்றுக்கொள்வது, அரசாங்க நிதியில் மது வகைகளையும், சிகரெட் தினுசுகளையும் வாங்கி சொந்தத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது போன்ற, இந்தியத் தூதுவர்கள் எதேச்சாதிகாரமாக சட்டத்தை மதிக்காது நடந்துகொண்ட சம்பவங்கள் சில சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க நிதியில் மதுவும்---புகையும்!

" இந்தியத் தூதுவர் ஒருவரும், அவர் அலுவலக ஊழியர்கள் சிலரும் தங்கள் சொந்த உபயோகத்திற்குத் தேவையான மது வகைகளையும், சிகரெட்டுகளையும் அரசாங்க நிதியிலிருந்தே இரண்டாண்டுக் காலத்துக்கு மேலாக வாங்கிவந்துள்ளனர்.

"தேர்ந்த அனுபவசாலியை தலைமை அதிகாரியாகக்கொண்ட தூதுவராலயத்தில், மேற்படி அரசாங்கப் பணத்தைச் செலவழிக்க இருக்கும் உரிமை முறைதவறி செயலாற்றப்பட்டுள்ளது கண்டு குழு வருந்துகிறது"

கார் வாங்கும் விவகாரத்தில் அதிகாரிகள் எதேச்சாதிகாரம்!

"தூதுவர் அலுவலகம் ஒன்றில் நீண்ட நாட்களாகப் பணிபுரிந்து வரும் தலைமை அதிகாரி ஒருவர், கார் ஒன்று வாங்குவதற்காக நான்கு ஆண்டுக் காலத்தில் மூன்று முறை முன்பணம் பெற்றிருக்கிறார்.

"இச்செயல், 'தேர்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு வகுக்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குகளையும் மீறின செயலாகும்' என்று ஆய்வுக் குழு கருதுகிறது.

"இவ்விவகாரத்தைத் தணிக்கையாளர்கள், தொடர்புடைய அமைச்சர் துறையின் கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகும் கூட, அதை அமைச்சர் துறை அலட்சியப்படுத்தியிருப்பது 'தீவிரமான நடவடிக்கை' எடுத்துக்கொள்ளத்தக்கது என்று ஆய்வுக் குழு கருதுகிறது.

"அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாது ஒவ்வொரு முறையும் காரை விற்றிருக்கிறார். அதே அதிகாரி!

"அதே அதிகாரி, கார் வாங்குவதற்காக ஒருதடவை வாங்கிய பணம், அந்தக் காரின் கொள்முதல் விலையைவிடக் கூடுதலானதாகும். ஆனால், அம்மிகுதிப் பணத்தை, நடைமுறை விதிப்படி தலைமை அதிகாரி உடனடியாகத் திருப்பித் தரவில்லை.

"அதே அதிகாரி மற்றொரு விவகாரத்தில், 'கார் விற்ற பணத்தை ஒரு மாதத்திற்குள்ளாகக் கார் வாங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டும்' என்ற விதி இருந்தும்கூட, கார் வாங்குவது என்ற பெயரில் அப்பணத்தை ஆறு மாதங்கள்வரை தன் கைவசமே வைத்திருந்தார்."

அரசாங்க அனுமதியின்றி பெருந்தொகை பெற்றனர்!

"தூதுவர் அலுவலகம் ஒன்றில் உள்ள அமைச்சர் ஒருவர் தனக்காகவும், தனது ஊழியர்களுக்காகவும் முறைதவறி 'பெருந்தொகை'யை முன்பணமாகப் பெற்றுள்ளார். அதற்காக, முன்கூட்டி பெறவேண்டிய அரசாங்கத்தின் அனுமதி பெறப்படவில்லை," என்று, குழு குறிப்பிட்டிருக்கிறது.

ஜனநாயகக் குரலுக்கு எதிராகத் தடியடி!

நிகோசியா, மார்ச் 29—

நாடு கடத்தப்பட்ட சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவர் விடுதலை செய்யப்பட்டதும், ஆனால் அவர் மீண்டும் சைப்ரசுக்குள் நுழையக்கூடாது என்றும் பிரிட்டன் பிறப்பித்துள்ள உத்தரவு தெரிந்ததேயாகும்.

அவர் சைப்ரசுக்கு வரவேண்டுமென்றும், அவர்மீது விதிக்சப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என்றும் பாமகுஸ்டாவில், மக்கள் ஆர்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் படைகள் தடியடி—கண்ணீர்ப்புகை ஆகியவைகளை உபயோகித்து ஆர்பாட்டக்காரர்களைக் கலைத்தனராம். துருப்புக்கள்மீது கற்கள் வீசப்பட்டதாம்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

விட்டு, என்னைக் கேட்காமலேயே எனது சிபாரிசை ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

"மேலும், பிரதம செயலாளர் தனக்குப் பிடிக்காத காரணத்தால் ஒரு நீர்ப்பாசன எஞ்சினீயரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்; இது குறித்து முதன் மந்திரி கேட்கவே இல்லை."

சகாக்களை மதிக்காத முதன் மந்திரி!

சர்வாதிகாரியாக நினைக்கிறார்

முதலாளிகளுடன் கூடிக் குலவுகிறார்

பீகார் முதல்வர்மீது முன்னாள் மந்திரி குற்றச்சாட்டு

பாட்னா, மார்ச் 29—

முன்னாள் மந்திரி ஒருவர், பீகார் முதன் மந்திரிமீது சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார்.

அவை, காங்கிரஸ் ஆட்சியில் மந்திரிகள் எப்படி எல்லாம் நடந்து கொள்கின்றனர் என்பதைத் தெளிவாக்குபவையாயுள்ளன.

பீகார் மாநிலத்தில், நீர்ப்பாசன இலாகா மந்திரியாயிருந்த ராம் சரித்திர சிங் என்பார் முதன் மந்திரி டாக்டர் ஸ்ரீ கிருஷ்ண சின்னாவின்மீது சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், காணப்படுவன :—

அவர் போக்கு!

"என்மீது எல்லா வகையான பொய்க் குற்றச்சாட்டுகளையும் கிளப்பி எனது பொது வாழ்க்கையைக் கெடுக்கும் போக்கில் முதன் மந்திரி நடந்துகொண்டதே எனது இராஜினாமாவுக்குக் காரணம்.

கூடிக்குலவுகிறார்!

"முதன் மந்திரியின் போக்கில் சில மாறுதல்களை நான் காண்கிறேன் — அதாவது, ஒரு பக்கம் அவர் சர்வாதிகாரியாக நினைக்கிறார்; மறுபக்கம், மாநிலத்தில் உள்ள பெரு முதலாளிகளுடன் கூடிக் குலவுகிறார்.

சகாக்களைக் கேட்பதில்லை!

"முதன் மந்திரி விவகாரங்களுக்கு முடிவு காணுவதில், சக மந்திரிகளைக் கேட்பதில்லை. மாறாக, அரசாங்கத்தின் பிரதம செயலாளர் சொற்படியே முதன் மந்திரி ஆடுகிறார். இதன் விளைவாக மந்திரிகளின் முடிவையே செயலாளர் மாற்றவும், குறைகூறவும் முற்படுகிறார்.

பாரபட்சமா?

"சீனாவில் உள்ள ஒரு நதியின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அறிந்துவருவதற்காக ஒரு நிபுணர் குழுவை அனுப்புவதென டில்லி சர்க்கார் முடிவு செய்திருந்தார்கள்; அந்தக் குழுவில், பீகார் நீர்ப்பாசன இலாகா பிரதம எஞ்சினீயரான மத்ரானி என்பவரை அனுப்புவதென நான் சிபாரிசு செய்திருந்தேன்; ஆனால் இதை, நிதி இலாகா செயலாளர் மறுத்துவிட்டு முதன் மந்திரிக்கு நேரடியாக 'காகிதக் கட்டு'களை அனுப்பிவிட்டார்; அவர், அவற்றைப் படித்து

(1-ம் கலம் பார்க்க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழக

எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்குப் பாராட்டு

திருவல்லிக்கேணி கடற்கரையில்
31-3-57 ஞாயிறு மாலை 6-மணிக்கு

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

★

அண்ணா

அவர்களும், பிறரும் கலந்துகொள்வர்.

பலர் பாராட்டுரை வழங்குவர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.கழக தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—3—57 சனி

கோட்டை குடியேற்றம்!

ஏற்கனவே சட்டசபை கோட்டையினுள் இருக்கும் ஒரு கட்டடத்தில் நடைபெற்றுவந்தது. அக்கட்டடம் சிறியது என்பதற்காக, மவுண்ட்ரோடு பகுதியில் ஏறத்தாழ 12 இலட்ச ரூபாய் பெருந்தொகை செலவில் புதியதொரு கட்டடம் கட்டப்பெற்றது. அதில் இதுவரை சட்டசபை கூட்டம் நடைபெற்றும் வந்தது.

ஆந்திரமும், மலபாரும், தென் கன்னடமும் பிரிக்கப்பட்டுவிட்டதின் காரணமாக, சென்னை மாநில சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டிருக்கிறது. இவ்வெண்ணிக்கைக் குறைவை ஒரு புகலாகக் கொண்டு, சட்டசபைக் கூட்டத்தை பழைய கோட்டை மண்டபத்திலேயே கூட்டுவதென்று காங்கிரசு ஆட்சி முடிவிற்கு வந்துவிட்டது.

கோட்டை மண்டபத்தைச் சட்ட சபைக்கேற்ற வசதியுடையதாக்குவதற்கான காரியங்களில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது. அவ்வாறு திருத்தி அமைக்கப்படுவதற்காக மேலும் ... இலட்சத்தைப் பாழாக்குவதில் முனைந்திருக்கிறது.

சட்டசபை கூடுவதற்கென்று புதிதாகக் கட்டப்பட்டுள்ள மண்டபம், இப்பொழுதுள்ள சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு நோக்குமிடத்து, மிகப் பெரியதாகத்தான் இருக்கும் என்பதில் ஆட்சேபனை இல்லை. விசாலமாக இருக்கும் ஒரு மண்டபத்தில் சிலர் மட்டுமே கூடி செயல்படுவதினால், அதற்கு எதுவும் கேடு ஏற்பட்டுவிடப் போவது கிடையாது. எனவே, வழக்கம்போல் புதிய மண்டபத்தில் சட்டசபை கூட்டத்தை நடத்திவருவதுதான் விரும்பத்தக்கதாகும்.

நாளுக்குநாள் அரசியல் விழிப்புணர்ச்சி மக்களிடத்தில் பெருகி வருகின்றது. அதன் பலனாக சட்டசபை நிகழ்ச்சிகளைக் கண்டு அறிவு பெறவேண்டும் என்றப் போவதும் வேகமாக மக்களிடம் பரவி வருகின்றது.

நாட்டு மக்களிடத்தில் அத்தகு ஆவல் தோன்றி இருப்பது பாராட்டத்தக்கதாகும். தானாக ஏற்பட்டுவரும் அவ்வாவலுக்குத் தடைபோடாது, ஊக்கிவிட வேண்டியது பொறுப்புள்ள அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும்.

இப்பொழுதுள்ள புதிய சட்டசபை மண்டபம், மக்களுக்கு ஏற்பட்டுவரும் புதிய அரசியல் ஆவலைக் கணிசமாகப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது. ஆனால், பழைய கோட்டைக்கே மீண்டும் சட்டசபையைக் குடியேற்றுவதின் மூலம், மக்களின் அரசியல் ஆவல் மங்கிப்போவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

பார்லிமெண்டரி சனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக பறைசாற்றிவரும் காங்கிரசு ஆட்சி, சட்ட சபை நடவடிக்கைகளைக் காணவும் அதன் விளைவாக அரசியல் அறிவுபெறவும் துடிதுடிக்கும் மக்களின் பேரவாவிற்குத் தடை விதிக்க முன்வருவது விந்தையாகத்தான் இருக்கிறது.

சட்ட சபை நிகழ்ச்சிகளை, இதுவரை வந்ததைவிட இனிப்பெருந் திரளான மக்கள் காண வருவர் என்பது நிச்சயமாகும். அவ்வாறு பெருகிய மக்கள் தொகையின் கண்களிலிருந்து, சட்டசபையில் தாங்கள் நடந்துகொள்ளும் விதத்தை மறைத்துக்கொள்ளுவதை, காங்கிரசுக் கட்சியினர் ஏன் விரும்புகின்றனர் என்பதில் உள்ள இரகசியத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

புதிய சட்டசபை மண்டபம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள மவுண்ட் ரோடில் இருந்துவந்ததினால், அதைப் பார்க்கின்றபொழுது ஒருவருக்கு ஏற்படக்கூடிய புத்தறிவு பெறும் வேட்கை, அக்கட்டடத்தைப் பார்க்கின்ற மக்கள் அனைவருக்கும் ஏற்படுவது சாத்தியமாயிற்று. ஆனால் கோட்டை மண்டபத்தின் மூலம், அத்தகு வேட்கையைப் பெற மக்களுக்கு இடமே கிடையாது.

கோட்டை மண்டபத்தில் சட்டசபை நிகழ்ச்சிகளைக் காணுகின்ற வாய்ப்பைப் பெரும்பான்மையினரான பொதுமக்களால் ஏககாலத்தில் பெற முடியாமற் போவது ஒருபக்கம் இருக்க, சட்டசபை உறுப்பினர்களுக்குக்கூட பல சங்கடங்கள் ஏற்படுவது நிச்சயமாகும்.

மவுண்ட்ரோட் சட்ட சபை மண்டபத்தைச் சுற்றி, சட்ட சபை உறுப்பினர்கள் தங்குவதற்கான ஓய்வு விடுதிகளும், உணவு விடுதியும் வசதியாக இருந்தன. போக்குவரத்து வசதிகளுக்கும் குறைவு கிடையாது. சட்ட சபை இரவு கூட்டங்களுக்கு அச்சமின்றி வந்து போவதற்கும் வசதி நிரம்ப இருந்தது.

ஆனால் கோட்டை நுழைவேற்றம், இவ்வளவு வசதிகளையும் பறித்துவிடக் கூடும்.

அரசாங்கத் தலைமை அலுவலகத்திற்குள், சட்டசபை உறுப்பினர் ஓய்வு விடுதிக்கும் கணிசமான தொலைவு இருந்த பொழுதே, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகளின் பணிகளில் அளவுக்கு மீறித் தலையிட்டுக் குறுக்கிட்டு வருவது மிகமிகச் சாதாரண நடைமுறையாக இருந்துவந்திருக்கிறது. இனி அந்த விஷயத்திற்காக பயணமும் முன்னிலும் அதிகமாக, காங்கிரசு உறுப்பினர்கள் கலகமாகச் செய்யக்கூடும். 'தெருந்தூரம் ... யம் கொடுத்தால் விருந்துக்கு இரண்டு தெருவும் கொட்டும்' என்ற பழமொழி காங்கிரசுச் சட்டசபை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் உறுதியாக நடைபெறக் கூடியதாகும்.

காங்கிரசு ஆளவந்தார்களை எதிர்த்து சட்டசபைமுன், பொதுமக்கள் காண அமைதி ஆர்ப்பாட்டம் செய்வது என்பது, இனி முடியாது போகக் கூடும். அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றவர்களை, மக்கள் கண்களுக்குப்படாமல், தடிகொண்டு தாக்குவது காங்கிரசு ஆட்சியினருக்கு சுலபமாகும். கோட்டைக்கு சட்டசபையை மாற்ற காங்கிரசு ஆட்சி முனைந்திருப்பதில் மறைந்திருக்கும் காரணங்களில் எல்லாம், மேற் குறிப்பிட்ட ஆர்ப்பாட்டக்காரர்களைத் துவைத்துத் தாக்கக் கிடைத்துள்ள வாய்ப்பைத்தான் முதன்மையானதாகக் கொள்ளவேண்டும்.

கோட்டை குடியேற்றத்தின் மூலம் மொத்தத்தில் 17 இலட்சம் ரூபாய் பொதுமக்களின் வரிப்பணம் பாழாகிறது. மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குவதைத் துவக்கமாகக் கொண்டே காமராசர் ஆட்சி பொறுப்பேற்கிறது. நம் ஆட்சிக் காலத்தில் பாழாக்க இருக்கின்ற வரிப்பணத்திற்கு இது, முன் அறிவிப்பு போலும்!

சட்டசபை மாற்ற விஷயத்தில் இப்படி பல லட்சத்தைப் பாழாக்குவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதை என்றைக்கும் மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் ஆட்சியாளர்களை எச்சரிக்கின்றோம்.

சட்டசபைகள் கூடும் மண்டபங்கள்

ரூ. 6 இலட்சம் செலவில் திருத்தியமைக்கப்படுமாம்

மவுண்ட்ரோடில் உள்ள அரசாங்க மாளிகையில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் நடைபெற்றுவந்த சட்டசபைக் கூட்டத்தை இனி செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள பழைய கட்டிடத்திலேயே நடத்த வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதல்லவா?

புதிய சட்டசபை, கவுன்சில் கூடுவதற்கு ஏற்றவாறு மண்டபங்கள் திருத்தியமைக்கப்படுகிறது. இத்துடன் சட்டசபை அலுவலகத்திற்குத் தேவையான முறையில் புதிய கட்டிடங்களும் கட்டப்படுகிறது.

சிற்றுண்டி விடுதி, கார் நிற்கும் இடம் ஆகியவை விரிவுபடுத்தப்படுகிறது.

இவைகளுக்கு மொத்தம் ரூ. 6½ இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க அலுவலகத்தின் மேற்குப் பகுதியில் மூன்றடுக்கு மாடி கட்டுவதற்கும், வடக்குப் பகுதியில் பல புதிய அறைகள் கட்டுவதற்கும், சட்டசபை மண்டபங்களுக்குப் படிப்பறையாகக் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்தி மொழியை மூலமாகக் கொண்ட சொற்கள்

இதரமொழிகளில் இருக்கின்றனவாம்

அவற்றைத் தொகுத்து அகராதி வெளியிடுகிறார்களாம்!

புதுடில்லி, மார்ச் 28—

டில்லி சர்க்காரின் கல்வி இலாகாவினர், இந்தியை அகில இந்திய மொழியாக்கும் முயற்சியை நாளுக்கு நாள் தீவிரமாக்கி வருகின்றனர். அதற்காக மக்களின் வரிப்பணம், கணக்கு வழக்கின்றிச் செலவிடப்பட்டு வருகின்றது.

இருமொழி அகராதிகளாம்

இந்தி, உருது மொழிகளை மூலமாகக் கொண்ட சொற்கள் வேறு பல இந்திய மொழிகளிலும் இருக்கின்றனவாம்; அதனால் அப்படிப்பட்ட சொற்களை எல்லாம் ஒன்று சேர்த்து இருமொழி அகராதிகளை வெளியிட இந்திய சர்க்கார் கல்வி இலாகா முடிவு செய்து வேலை செய்கிறதாம்.

அசாமி, குசராத்தி, வங்காளி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் இந்தி, உருதுமொழிகளை மூலமாகக் கொண்ட சொற்கள் இருக்கின்றனவாம்.

இந்தச் சொற்களை எல்லாம் தேடிப்பிடித்து அகராதியாக வெளியிடுகிறார்களாம்.

முதலில் வங்காள மொழியில் உள்ள இந்தி உருதுச் சொற்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்களாம்.

இதர மொழிகளிலும், இது போன்றுள்ள சொற்களைக் கொண்ட அகராதி வெளியிடப்படுமாம்.

இந்தியை ஒரு அகில இந்திய மொழியாக வளர்ப்பதற்கு இந்த முயற்சி முதற்படியாக இருக்குமாம்.

வெறிகொண்டவர்களின் மூர்க்கத்தனமான முயற்சி

மக்கள் சபையில் உபயோகிக்க இந்திச் சொற்களாம்!

புதுடில்லி, மார்ச் 28—

பார்லிமெண்டரி, மற்றும் சட்ட, நிர்வாகத் துறைகள் இவற்றில் உபயோகிக்கப்பட்டு வரும் ஆங்கிலமொழி நுணுக்கச் சொற்களுக்குச் சரியான இந்திச் சொற்கள் தயாரிக்கப்பட்டு விட்டனவாம்.

இதற்கென்று, 38 உறுப்பினர்களைக் கொண்டு மக்கள்சபை நியமித்த குழுவினர், இதுவரை அப்படிப்பட்ட 21,000 சொற்களை உருவாக்கியுள்ளனராம்.

ஏற்கனவே இருந்த குழு ஒன்று 5,000 சொற்கள் தயாரித்துள்ளதாம்.

இந்தச் சொற்கள் அடங்கிய அகராதி ஒன்று மக்கள் சபையில், குழுவின் தலைவர் பி. டி. தாண்டன அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாம்.

இந்தச் சொற்களை, டெல்லி மக்கள்சபை, மாநில சட்டசபைகள், டெல்லி சர்க்கார், மற்றும் மாநில சர்க்கார்கள் அதிகாரபூர்வமான வார்த்தைகள் எனக் கொண்டு உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதாம்.

சென்னைக்குக் கை விரிப்பு!

புதுடில்லி, மார்ச் 28—

சென்னை போலீஸ் படையில் உள்ள பெரிய அதிகாரிகளின் எண்ணிக்கையை 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படவேண்டும் என்று சென்னை அரசாங்கம் கோரியதாம்.

இந்த கோரிக்கையை மத்திய அரசாங்கம் சென்ற ஆண்டு மே மாதத்திலேயே நிராகரித்து விட்டதாம்.

இந்தத் தகவலை மக்கள் சபையில் உள்விவகார அமைச்சர் பி. என். தத்தார் தெரிவித்துள்ளார்.

'இரண்டாண்டுகள் பொறுத்திருந்தோம்'

'வேலைநிறுத்தத்தை தவிர வேறு வழியில்லை'

அகோலா ஆசிரியர்கள் முடிவு

அகோலா, மார்ச் 28—

அகோலாவில் ஊராட்சி மன்றம் நடத்திவரும் பள்ளிகளில் பணியாற்றும் 225 துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும்வரையில் வேலைநிறுத்தம் செய்வதென்று முடிவு செய்துள்ளனர்.

ஆசிரியர் சங்கத்தின் தலைவர் நிருபர்களிடம் பேசுகையில், கடந்த இரண்டாண்டுகாலமாக ஆசிரியர்கள் எல்லா முறைகளையும் கையாண்டு ஊதிய உயர்வு கோரினர் என்றும், கடைசியாக வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர ஆசிரியர்களுக்கு வேறு வழி இல்லாமற்போய்விட்டது என்றும், தாங்கள் மாதம் ரூ. 30 அடிப்படை சம்பளமாகப் பெறுவதாகவும், இது, உள்ளாட்சிக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாநில அரசாங்கத்தால் தரப்படும் ஊதியத்தைவிட, மிகவும் குறைவானது என்றும் தெரிவித்தார்

'நேப்பா' பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலைத் திட்டம் வெற்றி பெறுமா?

வெளிநாட்டுத் தூதுக்குழு தெரிவித்த சந்தேகம் உண்மைகளுக்கு அப்பாற்பட்டவையாம்!

அநுபவத்திலிருந்து தெரிவதாக அமைச்சர் தகவல்

புதுடில்லி, மார்ச் 28—

'நேப்பா' பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும் மூலப்பொருள்களை நன்கு பரிசீலனை செய்யப்பட்டபின் அவை தேவைப்படும் 'தரமுள்ளவை'யெனக் கண்டறியப்பட்டதாக மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மத்திய கனரகத் தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு வருகை செய்த சுவீடன் தூதுக் குழுவினர் 'இந்தத் திட்டம் வெற்றி பெறுவது சந்தேகம்,' என்று கூறியுள்ளது, சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றும், இந்தத் தூதுக் குழுவினர் தொழிற்சாலையைப் பார்வையிடவில்லையென்றும், தூதுக்குழு தெரிவித்துள்ள சந்தேகங்கள் உண்மை நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்டவையாக உள்ளன என்று அனுபவங்களிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட டாக்டர்கள் முடிவு!

பாட்னா, மார்ச், 28—

பாட்னாவிலுள்ள பெரிய மருத்துவ விடுதியைச் சேர்ந்த டாக்டர்கள் மார்ச் 31-ந் தேதிக்குள் தங்களது கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் மார்ச் 31-ந் தேதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனரென தெரியவருகிறது.

உடுமலையில்

அண்ணா, மதியழகன்

1—4—57 அன்று மாலை உடுமலையில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களும் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் சொற்பொழிவாற்றுவர்.

காஞ்சியில் பாராட்டுக் கூட்டம் ஒத்திவைப்பு

சென்னை சட்டசபை — டில்லி மக்கள் சபை தேர்தலில் வெற்றிபெற்ற அண்ணா, மற்றும் தி. மு. கழகத் தோழர்களுக்கும் 1—4—57 மாலை காஞ்சியில் தி. மு. க. சார்பில் நடத்த இருந்த பாராட்டுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு தியாகராயநகர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

31—3—57 காலை 9 மணிக்கு சென்னை—வடக்கு தியாகராய நகர் (36-வது வட்ட) தி. மு. க. செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் (16, இரயில்வே பார்டர் ரோடு—கோடம்பாக்கம் இரயில் நிலைய எதிரில்) நடைபெறும்; அதுபோது பாராட்டு விழா நடத்துவது பற்றி ஆராயப் படும்.

ஆந்திர கோரிக்கை: டில்லி ஏற்கவில்லை?

ஐதராபாத், மார்ச் 30—

தனியார் துறையின்கீழ் ஆந்திர மாநிலத்தில் ஒரு பெரிய எரு உற்பத்தித் தொழிற்சாலையை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தவேண்டும் என்று ஆந்திர அரசாங்கம் டில்லியிடம் கேட்டுக்கொண்டதாம்.

'இதுவரையில் டில்லிப் பேரரசு இது பற்றி ஆவன செய்ய முன்வரவில்லை,' என்று ஆந்திர சட்டசபையில் அமைச்சர் பிரமானந்தரெட்டி கூறியுள்ளார்.

திருத்தணியைத் திருப்பித் தரமாட்டாராம்!

எல்லைத் தகராறு குறித்து ஆந்திர முதன் மந்திரி

ஐதராபாத், மார்ச் 29—

ஆந்திர—தமிழக எல்லைப் பிரச்சினை குறித்து ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி என்ன கருத்துக்கொண்டிருக்கிறார் என்பதை, அவர் சட்டசபையில் தந்துள்ள பதில் ஒன்று கூறுகிறது.

சம்மதமே!

'தமிழகத்துடன் நமக்குள்ள எல்லைப் பிரச்சினை குறித்து படாஸ்கர் மத்தியஸ்தம் செய்வது நமக்குச் சம்மதமே,' என்று சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

வேப்பனப்பள்ளி

'ஓசூர் பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு வரும்போது, சென்னை கிருஷ்ணகிரி தாலுகாவில் உள்ள வேப்பனப்பள்ளி பிர்க்கா பற்றியும் பேச்சுக்கள் துவங்கும்,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

எப்போதுதான்?

'எல்லைத் தகராறுகள் முடிவு காணப்படாமல் இழுத்துக் கொண்டே இருக்கின்றனவே, எப்போதுதான் ஒரு முடிவு காண உத்தேசம்,' என்று அரங்கநாத முதலியார் (திருத்தணித் தொகுதி உறுப்பினர்) கேட்டார்.

நீங்கள் இங்குதான்!

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சஞ்சீவி, 'விவகாரங்கள் ஒரு முடிவுக்கு வருகின்றனவோ இல்லையோ, நீங்கள் இங்குதான் இருக்கவேண்டும்,' என்று கூறினாராம்.

அதாவது, 'எல்லைப் பிரச்சினைகளுக்கு முடிவு வந்தாலும் இல்லாவிட்டாலும் திருத்தணி ஆந்திரத்துடன்தான் இருக்கப் போகிறது,' என்ற கருத்தையே அவர் அப்படிக் கூறியிருப்பதாகக் கொள்ளலாம்.

கல்கத்தா, மார்ச் 28—

ஜாகர்தாவில் நடைபெற்ற இராணுவ மாநாடு பலனளிக்கவில்லை என்று இந்தோனேஷியத் தலைவர் சுகர்ணோ ஒப்புக்கொண்டுள்ளார்.

****

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாடு

★

"செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு, வரும் மே திங்கள் 11-12-ந்தேதிகளில் காஞ்சிபுரத்தில் நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

****

பாராட்டு ஊர்வலங்கள்

31—3—57 பிற்பகல் 2 மணி அளவில், சென்னை—எழும்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, சென்னை—பெரியமெட்டு (26-வது வட்ட) தி. மு. கழகக் கிளையின் சார்பில், ஸ்டிங்கர்ஸ் ரோடிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்படும்.

* * *

31—3—57 காலை 6½ மணிக்கு சென்னை 37-வது வட்டம் (இராயப்பேட்டை) தி. மு. கழகச் சார்பில் கழகப் பணிமனையிலிருந்து சென்னை — ஆயிரம் விளக்குத் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டி ஓர் ஊர்வலம் புறப்படும். கழகத் தோழர்கள், மன்றங்கள், படிப்பகங்கள், ஏனைய நிறுவனங்களைச் சார்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கோரப்படுகிறார்கள்.

****

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் தொகுதித் தேர்தல் வழக்கைச் சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு திறம்பட நடத்தவேண்டிக் கீழ்க் கண்ட வகையில் அன்புடன் வழக்கு நிதி தந்துள்ளார்கள்:—

சேலம் பொதுக்கூட்டத்தில்	... 87—7—0
கள்ளக்குரிச்சி பொதுக்கூட்டத்தில்	... 74—4—3
விருத்தாசலம் பொதுக்கூட்டத்தில் தோழர் சி. முனுசாமி மூலம்	... 50—0—0

குறிப்பு: வழக்கு நிதி அனுப்பிவைக்க விரும்புவோர் இரா. நெடுஞ்செழியன், எண் 26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

****

பாராட்டுக்கூட்டங்கள்

1—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—செம்பியம் (20-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில், பெரம்பூர், ரங்கசாமி நாயுடு தெருவில் (பிள்ளையார் கோயில் அருகில்), சட்டசபைத் தேர்தலில் பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ப. புகழேந்தி பேசுவர்.

* * *

குளித்தலைத் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர் மு. கருணாநிதி அவர்களைப் பாராட்டி, 1-4-57 மாலை 5-30 மணியளவில் மோகன் சித்திரக் கலைக் கூடத்தார், சென்னை—மவுண்ட் ரோட், பாட்டர் தோட்டத்திற்கு அருகிலுள்ள மோகன் ஆர்ட்ஸ் பணிமனையில் தேநீர் விருந்தளிப்பார்கள்.

சீமான்களைப் பாதிக்காது!

திருச்சி, மார்ச் 28—

மின்சார 'வெட்டு' அமுல் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் ஒதுக்கப்பட்டுள்ள பங்கீட்டு அளவைவிட அதிகமாக உபயோகித்தால் யூனிட்டுக்கு 4 அணா வீதம் அதிகப்படி கட்டணம் செலுத்த வேண்டுமாம்.

சென்னை—8-வது வட்ட தி.மு.க.உறுப்பினர்கட்கு:

31—3—57 காலை 8 மணிக்கு சென்னை—8-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், 28, முத்துகிருஷ்ணன் தெருவில் நடைபெறும். பல பொருள்கள் ஆய்வுக்கு வரும்.

சென்னை-கோடம்பாக்கம் தி.மு.க.உறுப்பினர்கட்கு:

31—3—57 காலை 8 மணிக்கு கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது கழகச் செயற்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர்.

சென்னை சிம்சன் & குரூப் தி. மு. க. தோழர்களுக்கு:

31—3—57 காலை 9 மணிக்கு, 29-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையில் (31, வாலர்ஸ் ரோடு, சென்னை-2) மேற்கண்ட கம்பெனி தி. மு. கழகத் தோழர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். முக்கிய பொருள் பற்றி ஆராயப்படும்.

தையல் தொழில் நிலையம் திறப்பு விழா

31—3—57 காலை 9 மணிக்கு, சென்னை—பரசைவாக்கம் நெடுஞ்சாலை, 2/132 எண்ணுள்ள கட்டிடத்தில், அரசாங்க நற்சான்று பெற்ற தையற்கலைஞர் கே. பி. சுந்தரம் அவர்களின் தையல் தொழில் நிலையத்தைத் தோழர் என். ஆர். சடகோபன் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார்; தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

ஆர். எம். எஸ். 4-வது பிரிவு ஊழியர்கள் உதவிநிதி ஆண்டுவிழா

31—3—57 மாலை 3½ மணிக்கு, சென்னை அஞ்சல் பிரிப்பகம் 4-வது பிரிவு ஊழியர்கள் உதவி நிதி 7-வது ஆண்டு விழா, அஞ்சல் பிரிப்பகத்தில் தோழர் இராச. சக்கரவர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. இராமதாஸ், ஜி. இலட்சுமணன், புலவர் நன்னன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நாடகத் துவக்க விழா

31—3—57 மாலை 6½ மணிக்கு, சென்னை — வண்ணை, 13/14, கல்லப்பவாத்தியார் தெரு, கே. ஆர். சி. பள்ளியில் தோழர் சுரதா தலைமையில், எஸ். பி. நாடகக் குழுவினரின் 'எழுத்தாளன்?' நாடகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் இரா. அருள்பாண்டியன், ஆர். இ. கே. தண்டபாணி, கௌந்தி, வே. கபிலன் ஆகியோர் பேசுவர்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே --- மண்ணடி --- சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாகத் திருத்தமாக

இங்கிலீஷ் நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்து கொள்ள

கடைசி தேதி: 9--4--57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

வெற்றிபெற்ற சம்பத்திற்குப் பாராட்டு

தொகுதி எங்கணும் மாபெரும் வரவேற்பு

★

வதுரம்பட்டி :

நாமக்கல் தொகுதிக்குப் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டி, 20-3-57 இரவு 11 மணியளவில் வதுரம்பட்டி தி. மு. கழகச் சார்பில் ஓர் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் தாரை—தப்பட்டைகள் முழங்கிக்கொண்டு முன் செல்ல, கழகக்கொடி தாங்கிவெற்றி முழக்கமிட்டுத் தோழர்கள் பின் தொடர சம்பத் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார். உடன் தோழர்கள் காளியப்பன், சுந்தரராசன் ஆகியோரும் வந்தனர். ஊர்வலத்தின்போது தாய்மார்களும், தோழர்களும் மலர் மாலைகள்—கைத்தறி ஆடைகள் — இனிப்புகள் முதலியவை வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.

ஊர்வலத்திற்குப் பின் தோழர் காளியப்பன் தலைமையில் தோழர்கள் சுந்தரராசன் அவர்களும் சம்பத் அவர்களும் நன்றி தெரிவித்து சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பொத்தனூர் :

21-3-57-ல் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வரவேற்றும் பாராட்டியும் சேலம்—பொத்தனூர் தி. மு. கழகம் வெற்றி விழா கொண்டாடியிருக்கிறது.

ஊர் முழுவதும் சம்பத் அவர்களை வரவேற்று வளைவு தட்டிகளாலும், தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு, பாண்டு வாத்தியங்கள், நையாண்டி மேளங்கள் முழங்க வாணவேடிக்கைகள் விண்ணதிர திறந்த ஜீப்காரில் தோழர் சம்பத் அவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் பின்தொடர மாபெரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

உடன், தோழர்கள் காளியப்பன், சுந்தரராசன் ஆகியோரும் வந்தனர். இவ்வூர் வரலாற்றிலேயே காணுததொரு சிறப்பாக அமைந்திருந்த அவ்வூர்வலம் வரும்போது, ஏராளமான பொதுமக்கள் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டு சம்பத் அவர்களுக்கு மலர் மாலைகளும் — கைத்தறி துணிகளும் அணிவித்து தங்கள் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டார்கள். ஊர்வலம் திரு. வி. க. திடலை அடைந்தபோது 101 வெடிகள் முழங்கப்பட்டன.

பின்னர் தோழர் க. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. செகந்நாதன், சுந்தரராசன், வி. காளியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், சம்பத் அவர்கள், பாராட்டுக்கு நன்றி தெரிவித்து சிறப்பான தோர் உரையாற்றினர். அவருக்கு, சுதந்தன் சார்பில் தோழர் மலை. செகநாதன் மலர் மாலையும், வெற்றிலை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் வெற்றிலை மாலையும், மேற்படி சங்கத்தின் சார்பில் தோழர் மருதன் பாராட்டிதழ் ஒன்றும் அளித்து சிறப்பு செய்தார்கள். தோழர் ஒ. எர். சுப்பிரமணியம் என்பார் ஆங்கில நூல் ஒன்றைப் பரிசளித்தார்.

'நம் நாடு' வளர்ச்சிக்காக தோழர் ஒ. பி. சதாசிவம் அவர்கள், காலஞ்சென்ற தன் தாயின் நினைவாக 101 காலணுக்களும், வீரபத்திரன் என்ற 10 வயது சிறுவனுல் ஒரு காலணுவும் அளிக்கப்பட்டது.

தோழர் சம்பத் அவர்களால், தோழர் பி. கந்தசாமியின் புதல்வனுக்கு 'செங்குட்டுவன்' என்றும் தோழர் பொன்னுசாமியின் குழந்தைக்கு 'பாண்டியன' என்றும் பெயர் சூட்டப்பட்டது.

காலை 11 மணியளவில், சம்பத் அவர்கள் காய்ந்த கொடிக்காலையும், மாதிரிப் பண்ணையையும் பார்வையிட்டார்.

சென்னிமலை :

22—3—57 மாலை 7 மணிக்கு ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டி, சென்னிமலை தி. மு. கழகச் சார்பில் மாபெரும் ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலத்தில் தோழர் சம்பத் அவர்கள் பொது மக்களால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்.

இரவு 9 மணியளவில் 'குடியரசு பூங்கா'த் திடலில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்திற்கு புகழ் பெற்ற வணிகர் வி. எஸ். எ. சபாபதி (முதலியார்) அவர்கள் தலைமை வகித்தார். கழகச் செயலாளர் எ. இராசலிங்கம் பொதுமக்களை வரவேற்றுப் பேசினர். பின்னர் சம்பத் அவர்களுக்கு கழகத்தின் சார்பிலும், மேலபாளையம், குமாரபுரி, பாளையம் முதலிய கிராமங்களின் தொழிலாளர்கள், உழவர்கள் சார்பிலும், தனிப்பட்ட அன்பர்களாலும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. சென்னிமலை மேற்கு இராசவீதி கழக ஆதரவாளர்களால் ஒரு 'பவுண்டன் பேனு' அன்பளிப்பு வழங்கப்பட்டது. சென்னிமலை முஸ்லிம் சங்கத்தாரால் ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

இவ்வாறு பெருமைபடுத்திய தோழர்களுக்கும் —அன்பர்களுக்கும்—ஸ்தாபனங்களுக்கும் நன்றி கூறி, சம்பத் அவர்கள் விளக்கவுரையாற்றினர்.

அடுத்து திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம் சிறிது பேசிய பின், செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்குப் பின் வணிகர் வி. எஸ். எ. சபாபதி (முதலியார்) அவர்கள் சம்பத் அவர்களுக்கும் நகரப் பெரியோர்களுக்கும் கழக நண்பர்களுக்கும் விருந்தளித்தார்.

விருந்திற்குப்பின் கழக அலுவலகத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்கள் கழக வளர்ச்சி குறித்து உரையாற்றினர்.

'வரிப் பணத்தை வீண் விரயம் செய்ய நான் ஒத்துழைக்கமுடியாது'

மதுரை பொருட்காட்சிக் குழுக்களிலிருந்து எஸ். முத்து விலகல்

"மதுரை சித்திரை பொருட்காட்சிக்கு, நாடகம்—நாட்டியம்—இசை முதலியவை ஏற்பாடு செய்வதற்கு, மதுரையிலிருந்து சென்னைக்கு, இரண்டு அல்லது மூன்று பேர்கள் சென்று ஏற்பாடு செய்யலாம். ஆனால், அதிகாரபூர்வமாகவும், அதிகாரபூர்வமில்லாமலும் சுமார் 16 பேர்கள் வரை சென்னைக்குப் போய் 4-நாட்கள் தங்கி, கலைவிழா ஏற்பாடு என்ற பெயரால் மக்கள் வரிப்பணம் பாழாக்கப்படுவதை நான் விரும்பவில்லை; எனவே நானும், மேற்கண்ட விழாக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பொருட்காட்சிக் குழுவிலுள்ள கலைக் குழு—கைத்தொழில் குழு ஆகியவைகளில் தொடர்ந்து உறுப்பினனாக இருந்து, மக்களின் வரிப்பணம் வீணாக்கப்படும் செயல்களில் தொடர்பு கொள்ள விரும்பாததால், அவைகளில் உறுப்பினனாக இருப்பதைவிட்டு விலகிக் கொள்கிறேன்.

"முதலில் என்னை மேற்கண்ட குழுக்களுக்கு உறுப்பினனாகத் தேர்ந்தெடுத்த அவைகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கள், அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

காங்கிரசுக்கு எதிரானது அல்லவாம்!

கேரள மக்களின் தீர்ப்பு குறித்து பண்டிதர் கூற்று!

புதுடில்லி, மார்ச் 28—

"கேரள வாக்காளர் அளித்த தீர்ப்பு காங்கிரசுக்கு எதிரான வாக்கு அல்ல; மாருக, பிரதேசக் காங்கிரசில் ஏற்பட்டுள்ள அலங்கோலங்களுக்கு எதிரான தீர்ப்பு ஆகும்"

என்று பண்டித நேரு தோற்றுப்போன சில மராட்டிய பிரதேசக் காங்கிரச எம். பி.-க்களிடை பேசும்போது குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

'காஷ்மீரும், கோவாவும் இந்தியப் பகுதிகளே'

வெளிநாட்டுக் கொள்கை விவாதத்தில் வரக்கூடாதாம்

"காஷ்மீரும், கோவாவும் அந்நியப் பகுதிகளல்ல; இவை இந்தியப் பகுதிகளே; எனவே வெளிநாட்டுக் கொள்கைபற்றிய விவாதத்தில் காஷ்மீரோ, கோவாவோ, வரக்கூடாது" என்று மக்கள் சபையில் வி. கே. கிருஷ்ணமேனன் கூறியுள்ளார்.

தேர்தல் முடிந்ததும் காங்கிரஸ் தரும் பரிசு!

சென்னை, மார்ச் 28—

எப்ரல் முதல் தேதியிலிருந்து மாநிலமெங்கும் மின்சார விசையின் உபயோகத்தை 25 சதவிகிதம் குறைத்து அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

நீர்நிலை மின்சாரம் விநியோகமாகும் எல்லாப் பகுதிகளும் இதனுல் பாதிக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரத்தில் மட்டும் இந்த 'வெட்டு' இல்லை!

காளைக்கு வாக்கு - கைமேல் பலன்!

புதுடில்லி, மார்ச் 27—

'அம்மோனியம் சல்பேட்' உரத்தின் விலையை டன்னுக்கு ரூ. 35 கூடுதலாக அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இறக்குமதியாகும் சரக்கின் துறைமுக விலை கூடுதலாகிவிட்டதாம்; எனவே, எல்லா இரயிலடிகளிலும் டன் ரூ. 315-ஆக இருந்த விலை இனி ரூ. 350-ஆக உயர்த்தப்படுகிறதாம்.

விவசாயிகளுக்கு இதுவரையில் ரூ. 345-க்கு தரப்பட்ட சரக்கு இனிமேல் ரூ. 380 விலைக்குத் தரப்படுமாம்,

சிந்திரி இரசாயனத் தொழிற்சாலையில் 1956-ம் ஆண்டில் 3,31,000 டன் (அம்மோனியம்) சல்பேட் உற்பத்தியாயிற்றும்; இது முன் ஆண்டைவிட 10,000 டன் அதிகமாம்.

முறையிட்ட பின் இந்த முடிவா?

சென்னை, மார்ச் 28—

கரும்புப் பயிர்களுக்குத் திவுரமிடுதல் என்ற திட்டத்தின் கீழ் குடியானவர்களுக்கு 'அம்மோனியம் சல்பேட்' வாங்க சொந்த சாமீன்பேரில் ஒரு ஏக்கருக்கு ரூ. 50 வீதம் கடனுகத் தரப்படுகிறது; ஆனால் ஒரு நபருக்கு ரூ. 500-க்குமேல் கடன் தரப்படமாட்டாதாம்.

ஏக்கருக்கு ரூ. 50-ஆகத் தரப்படும் கடன் போதாது என்று முறையிட்டதின் பயனாக, இனி ஏக்கருக்கு ரூ. 100 கடன் தர அரசாங்கம் சம்மதித்துள்ளதாம்.

பார்வை இழந்தவர்கள் பரீட்சை எழுதுகின்றனர்

நாகபுரி, மார்ச் 28—

விதர்பா பகுதியில் இந்த ஆண்டில் மொத்தம் 1,74,000 மாணவர்கள் மெட்ரிக் பரீட்சை எழுதுகின்றனர். மாணவர்களுக்கு வசதியாக 81 இடங்களில் பரீட்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சையில் கலந்து கொள்ள இரண்டு கண்ணிழந்த மாணவர்களும் வந்துள்ளனர். கேள்விகளுக்கு இவர்கள் தரும் பதில் தனியாகப் பதிவு செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

இந்த அதிக உற்பத்திக்கு காரணம் என்ன?

புதுடில்லி, மார்ச் 28—

1956-ம் ஆண்டில் ஆலைத் துணி உற்பத்தி 528 கோடி கெசமாக இருந்தது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1955-ம் ஆண்டைக் காட்டிலும் இது 18,60,00,000 கெசம் அதிகமாம்.

உபகாரச் சம்பளங்கள்

1956—57-ல் வழங்கப்பட்டது பற்றி மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, மார்ச் 28—

பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 1957 பிப்ரவரி 28-ந் தேதிவரையில் உபகாரச் சம்பளங்களாக மொத்தம் ரூ. 1,71,77,981—11—0 வழங்கப்பட்டதாம்.

மக்கள்சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தகவல் தந்த துணைக் கல்வி அமைச்சர், இத்தொகையில் ரூ. 83,88,493—2—0 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் ரூ. 14,70,938—12—0 இதர பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 1955—56-ல் மொத்தம் ரூ. 1,50,16,159—3—0 வழங்கப்பட்டதென்றும், அதில் ரூ. 63,73,650—5—0 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், ரூ. 12,88,669—0—0 தாழ்த்தப்பட்ட குடி மாணவர்களுக்கும், ரூ. 73,53,839—14—0 இதர பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வழங்கப்பட்டதென்றும் அமைச்சர் கூறினர்.

1956—57-ல் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் மொத்தம் சுமார் ரூ. 88,24,000 அனுமதிக்கப்பட்டது என்று கேள்வியின் மற்றொரு பகுதிக்குப் பதிலளித்தார்.

உண்மையாகவா?

டாக்கா, மார்ச் 25—

இங்கு மாணவர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் பாகிஸ்தான் பிரதமர், 'காஷ்மீர் பிரச்சினையில், உலக நாடுகள் பாகிஸ்தான் பக்கமே இருக்கிறது' என்று கூறியதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

வெற்றி பெற்ற மு. கருணாநிதிக்குப் பாராட்டுக் கூட்டம்

திருவாரூரில் மாபெரும் வரவேற்பு

24—3—57 மாலை 6 மணிக்கு தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் மு. கருணாநிதி அவர்களைப் பாராட்டி, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கருணாநிதி அவர்களைப் பாராட்டி தோழர்கள் திருச்சி பராங்குசம், கருணை எம். ஜமால் ஆகியோர் பேசியபின், கருணாநிதியவர்களுக்கு பல கிளைகளும், படிப்பகங்களும், தனிப்பட்டவர்களும் ஏராளமான மலர் மாலைகளையும், கைத்தறித் துணிகளையும் அணிவித்துப் பாராட்டினார்கள்.

பாராட்டு விழா நடைபெறுவதற்கு முன், கருணாநிதியவர்களால் பல இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டது.

கருணாநிதியவர்களுக்கு, பொது மக்களாலும், பல படிப்பகங்களாலும் வரவேற்பரை நல்கி சிறப்பு செய்யப்பட்டது.

தோழர் கருணாநிதி தனக்கு பெருமை செய்த மக்களுக்கும், படிப்பகங்களுக்கும் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றிகூறி சிறப்புரையாற்றினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் 'அறிவக'த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★